# தமிழ் வளர்ச்சியில் கிறிஸ்துவ சமயம்

**பா. அனிஷா & வீ. கோபிநாத்**

**உளவியல் துறை , பூ. சா. கோ. அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை**

**23mpy006@psgrkcw.ac.in, gopinath@psgrkcw.ac.in**

**11**

**ஆய்வுச் சுருக்கம்:**

இன்றைய மனித சமூகத்தில் சமயங்கள் பல்வேறு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.இவ்வாறு பலவகையாக பிரிந்து காணப்படும் இச்சமயங்களின் ஒரே குறிக்கோளாக அமைவது "இறை நம்பிக்கை" ஆகும். எண்ணிளடங்கா புலவர்கள் மற்றும் முனிவர்கள், இறைவன் மீது கொண்ட தீரா அன்பு, பக்தி காரணமாக தமிழில் எண்ணற்ற பாடல்களை எழுதியுள்ளனர். அவ்வாறு கிறிஸ்துவ சமயத்தின் இறை நம்பிக்கையை தமிழர்களிடையே வளர்ப்பதற்காக ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தமிழ் மொழியை கற்றனர். தமிழ்ச்செம்மொழியின் தனித்தன்மையும், சிறப்புகளையும்,இலக்கண இலக்கியங்களையும் பார்த்து வியந்தனர். தமிழ் மொழியை மேலும் வளர்க்க பணிகளைச் செய்ய தொடங்கினார்கள் கிறிஸ்தவர்கள். அதில் கிறிஸ்துவ சமயத்தை மக்களிடையே பரப்புவதற்காக மொழிபெயர்ப்பு, எளிமையான எழுத்துநடை, உரை நடை, இலக்கிய பங்கு போன்றவற்றை காண்பதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கம்.

**ஆய்வு நோக்கம்:**

கிறிஸ்த்துவ சமயம் தமிழுக்கு ஆற்றிய பணிகள், இலக்கிய பங்கு மற்றும் வளர்ச்சிகளை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாகும்.

**கடவுச்சொற்கள்:**

எழுத்துநடை-உரைநடை-இலக்கியம்-மொழிபெயர்ப்பு-ஐரோப்பிய கிறிஸ்தவர்கள்-வீரமாமுனிவர்

**முன்னுரை:**


மனித சமூகத்தின் நல்வழிகாட்டியாகவும், இறை நம்பிக்கையை போற்றும் வகையிலும் சமயங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. அதில் கிறிஸ்துவ சமயமும் ஒன்று. கிறிஸ்துவ சமயம் மறுவுலகு சார்ந்ததாக மட்டுமல்லாமல் இவ்வுலகில் மானிடர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகொடுக்கும் சமயமாக கருதப்படுகிறது. இச்சமயம் மனிதன் மத தோற்றத்திற்கு வகுத்த கோட்பாடுகளுக்குள் வர தனித்து நிற்கிறது.

**பைபிளின் எழுத்துநடை:**

தோரா என்பது பைபிளின் முதல் ஐந்து புத்தகங்களின் தொகுப்பாகும் . ஆதியாகமம் , யாத்திராகமம் , லேவியராகமம் , எண்கள் மற்றும் உபாகமம் புத்தகங்கள் . இது பெண்டேட்ச் என அழைக்கப்படுகிறது அல்லது கிறிஸ்தவர்களால் மோசேயின் ஐந்து புத்தகங்கள்.இதில் எளிமையான எழுத்து நடையும், சிற்சில விடயங்களில் காணப்படும் நேர்த்திகளும் ஆசிரியர் தான் கண்டதையோ, பிறரால் தான்

அறிந்ததையோ எழுதுகிறார் என்பதை விளக்கிவிடும். இந்த எழுத்து நடையும் நேர்த்திகளும் பைபிளில் காணப்படுவதை அறியலாம். பண்டைய வேதங்களை இதிகாச கதைகளை ஒப்பிடும் போது பைபிள் பல விதங்களில் தனித்து நிற்கிறது.

**தமிழில் முதன்முதலில் மொழிப்பெயர்க்கப்பட்ட 300 ஆண்டுகள் பழமையான பைபிள்**



**உரைநடை வளர்ச்சியில் கிறிஸ்தவர்களின் பங்கு:**

தமிழில் முதல் முதலாக உரைநடை நூலை எழுதிய பெருமை கிறிஸ்தவர்களிடையே சாரும். கி.பி 1577ல் “கிறிஸ்தவ வேதோபதேசம்” என்னும் உரை நடை நூல் வெளியிடப்பட்டது. இதுவே தமிழில் வெளியான முதல் உரைநடை நூல் ஆகும். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராபர்ட்-டி-நோபிலி என்ற தத்துவ போதகர் சுவாமியார் தமிழில் முதல் தனி உரைநடை நூல்களை இயற்றினார். அவரை தொடர்ந்து வீரமாமுனிவர், கால்டுவெல், சீகன்பால்கு ஐயர் போன்றோர் தமிழ் உரைநடை நூல்களை எழுதித் தமிழ் இலக்கிய போக்கில் ஒரு திருப்பு முனையை அமைத்தனர்.

**கிறிஸ்துவத்தின் இலக்கிய பங்கு:**

கிறித்தவம் தொடர்பான தமிழ் இலக்கியங்கள் கிறித்தவ தமிழ் இலக்கியங்கள் ஆகும். கிறித்தவ சமய பின்புலம் கொண்டோர் ஆக்கிய இதர ஆக்கங்களும் கிறித்தவ தமிழ் இலக்கியமாக வகைப்படுத்தப்படுவதுண்டு. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி கிறித்தவ அறிமுகம் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் நிகழ்கிறது.

**தமிழ் மொழிக்கு பணியாற்றிய கிறித்துவர்கள்:**

தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் பணியாற்றிய கிறிஸ்தவர்களில் ஐரோப்பிய கிறிஸ்துவர்களும் பங்களித்தனர்.

- **ஐரோப்பிய கிறிஸ்துவர் பணி**

ஐரோப்பியர்கள் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்ப அவர்கள் தமிழை கற்றனர்.

- அச்சுப் பணி,
- அகராதித் தொகுப்பு,
- மொழிப் பெயர்ப்பு,

- பேச்சு இலக்கணத் தொகுப்பு,
- உரைநடை விருத்தி,
- இலக்கியப் பங்களிப்பு

என பல வழிகளில் இவர்கள் பங்களிப்பைச்செய்துள்ளார்கள்.இந்தியா என்றால் சமஸ்கிருதந்தான் என்ற நிலைமை ஓரளவு மாற்றி, இந்தியா என்றால் அதன்மூல மொழி தமிழ், இந்திய மண்ணிற்கே உரிய தொன்மை மொழி தமிழ், இந்திய மண்ணின் தொல்பழம் மாந்தர் திராவிடர் என்று, இந்த மண்ணிலும், வெளிநாட்டு மண்ணிலும் ஓரளவு நிலைநாட்டி யவர் ஐரோப்பியக் கிறித்தவர் சமயச் சான்றோரே ஆவர்.

**கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர் (1680-1742):**

வீரமாமுனிவர் என்ற கான்ஸ்டைன்டின் ஜோஸப் பெஸ்கி தமிழ் நாட்டில் கிறிஸ்துவ மத போதகம் செய்வதற்காகத் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினார். தேம்பாவணி என்ற காப்பியத்தின் மூலம் தேன்மொழியாம் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்.தமிழில் முதன்முதலாக அகராதி எழுதியவர் இவரே.

**வீரமாமுனிவர் படைப்புகள்**

- திருக்காவலூர்க் கலம்பகம்
- அடைக்கல மாலை
- கலிவெண்பா
- அன்னை அழுங்கல் அந்தாதி
- கித்தேரியம்மாள் அம்மானை
- வேதியர் ஒழுக்கம்
- வேத விளக்கம்
- பேதகமறுத்தல்
- ஞானம் உணர்த்தல்
- திருச்சபைக் கணிதம்
- வாமன் கதை
- பரமார்த்த குரு கதை
- தொன்னூல் விளக்கம்
- கொடுந்தமிழ் இலக்கணம்
- லுத்தேர் இனத்தியல்பு

**“அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கினன் வீரமாமுனியே“** என்பது தொன்னூலின் சிறப்புப் பாயிரம்.

**முடிவுரை:**

தமிழ் மொழி வளர்ச்சி பெற பல்வேறு சமயங்கள் தொண்டு செய்துள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்தியாவில் உள்ள எல்லா சமயங்களையும்விட கிறிஸ்துவ சமயம் அதிக தமிழ்

பணிகளையாற்றியுள்ளது. ஒருவரை மன்னிக்கும் செயல் ஒரு மனிதனின் மன அமைதியை நிலைநாட்டுகிறது, உடல் நலத்தையும் மேம்படுத்துகிறது. அதை மத வழியாக மனித சமூகத்தின் நல்வாழ்விற்காக சொல்லியது கிறிஸ்துவ சமையமே. எனவே, கிறிஸ்துவம் தமிழ் வளர்ச்சிக்கும், மனித வாழ்விற்கும் பெரும் பங்காற்றிகிறது.

**துணைநூற்பட்டியல்:**


1. தமிழின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவம் ஆற்றிய பங்களிப்பு மிக உயர்ந்தது, உன்னதமானது-தமிழ் நேசன் அடிகளார். (2014, August 18). NewMannar நியூ மன்னார் இணையம். http://www.newmannar.lk/2014/08/Mannar_796.html?m=1
2. Kumar, P. S. (2021, August 5). கிறிஸ்தவம் மதமா, பைபிள் கட்டுகதையா? – ஒரு ஆய்வு கட்டுரை வேதாகம களஞ்சியம். https://charlesmsk.blogspot.com/2016/11/1_10.html?m=1
3. Safety, T. F. (n.d.). தமிழுக்கு கிறிஸ்தவம் ஆற்றிய தொண்டு – 1. http://tnfoodsafety.blogspot.com/2010/09/blog-post_20.html?m=1
4. தேவப்ரியாஜ. (2014, February 23). கிறித்துவர்களின் தமிழ் பங்களிப்பு -தமிழ்ச்செல்வன். தமிழர் சமயம். https://tamilsamayam.wordpress.com/2014/02/23/%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D-%E0%AE%AA/
5. கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்/வீரமாமுனிவர் – விக்கிமூலம். (n.d.). https://ta.m.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B5%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AF%8A%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%B0%E0%AF%8D/%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D
6. Contributors to Wikimedia projects. (2023). Torah. Wikipedia. https://en-m-wikipedia-org.translate.goog/wiki/Torah?_x_tr_sl=en&_x_tr_tl=ta&_x_tr_hl=ta&_x_tr_pto=tc
7. அயல்நாட்டுக் கிறிஸ்த்துவ பாதிரிகளின் தமிழ் பணியும், கேடுகளும் – New Indian-Chennai News & More. (2015, April 13). https://newindian.activeboard.com/t60006585/topic-60006585/
8. Dinamalar. (2010, July 27). சமயமும் தமிழும் – Dinamalar Tamil News. Dinamalar. https://m.dinamalar.com/detail.php?id=48543
9. சேவியர. (2017, February 20). கிறிஸ்தவ வரலாறு 20 – தமிழ் வளர்த்த கிறிஸ்தவம். THE WORD. https://writerxavier.wordpress.com/2017/02/20/history-of-christianity-4/